பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

29 10 2024 6 45

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு நரேந்திர மோடி, மத்திய அரசுப் பணிகளுக்குப் புதிதாக தேர்வு செய்யப்பட்ட 51 ஆயிரம் பேருக்குப் பணி நியமன ஆணைகளை இன்று வழங்குகிறார்.

2. 9-வது ஆயுர்வேத தினம் நாடு முழுவதும் இன்று கொண்டாடப்படுகிறது.

3. வெப்ப அலையை மாநில பேரிடராக தமிழக அரசு அறிவித்துள்ளது.

4. தமிழகத்தில் வரைவு வாக்காளப் பட்டியல் இன்று வெளியிடப்படுகிறது.

5. இந்தியா - நியூசிலாந்து மகளிர் அணிகளுக்கு இடையேயான மூன்றாவது மற்றும் இறுதி ஒருநாள் கிரிக்கெட் போட்டி அகமதாபாதில் இன்று நடைபெறுகிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

மத்திய அரசுத் துறைகளில் பணியாற்றத் தேர்வு செய்யப்பட்ட 51 ஆயிரம் பேருக்கு, பிரதமர் திரு நரேந்திர மோடி காணொலி மூலம் இன்று பணி நியமனக் கடிதங்களை வழங்குகிறார்.

இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தித் தர முன்னுரிமை அளித்து வேலைவாய்ப்புத் திருவிழாவை மத்திய அரசு தொடர்ந்து நடத்தி வருகிறது.

அதன் ஒரு பகுதியாக இன்று நடைபெறும் இந்த நிகழ்ச்சியில் பணி நியமன ஆணைகள் வழங்கப்படவுள்ளன.

நாடு முழுவதும் 40 இடங்களில் இது தொடர்பான நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்நிகழ்ச்சிகளில் மத்திய அமைச்சர்கள் பங்கேற்கின்றனர்.

சென்னையில் நடைபெறும் நிகழ்ச்சியில் தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் திரு எல். முருகனும், மதுரையில் நடைபெறும் நிகழ்ச்சியில் மத்திய கனரக தொழில் துறை இணை அமைச்சர் திரு பூபதி ராஜு சீனிவாச வர்மாவும் பங்கேற்கின்றனர்.

கோவையில் நடைபெறும் நிகழ்ச்சியில் நிதித் துறை இணை அமைச்சர் திரு பங்கஜ் சௌத்ரியும், திருச்சியில் நடைபெறும் நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலத்துறை இணையமைச்சர் திரு ஜார்ஜ் குரியனும் கலந்து கொள்கின்றனர்.

<<<<>>>>

நாடு முழுவதும் 9-வது ஆயுர்வேத தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

தன்வந்திரி ஜெயந்தி அன்று, 2016-ம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் ஆயுர்வேத தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

இதையொட்டி மத்திய ஆயுஷ் அமைச்சகம் நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்துள்ளது.

<<<<>>>>

தமிழ்நாட்டில் 14 கூட்டுறவு மற்றும் இரண்டு பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு 10 சதவீத போனஸ் வழங்கப்படும் என மாநில அரசு அறிவித்துள்ளது.

ஒதுக்கீட்டு உபரி உள்ள இரு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் தொழிலாளர்களுக்கு 20 சதவீத போனஸ் வழங்கப்படும் என்று மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதன்மூலம் 5 ஆயிரத்து 775 தொழிலாளர்களும், பணியாளர்களும் பயன் பெறுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழ்நாட்டில் இந்த ஆண்டு கூட்டுறவு சங்கங்களின் மூலம் 166 மையங்களில் பட்டாசு விற்பனை செய்யப்படுவதாக அத்துறைக்கான மாநில அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் தீபாவளி சிறப்புத் தொகுப்பு விற்பனையை நேற்று அவர் தொடங்கி வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கூட்டுறவு நிறுவனங்கள் மேற்கொள்ளும் புதிய முயற்சிகள் மக்கள் மத்தியில் பெரிய வரவேற்பைப் பெற்றுள்ளதாகத் தெரிவித்தார்.

<<<<>>>>

குன்னூரைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத் தொழிலாளர்களுக்கு போனஸ் வழங்க வேண்டும் என மாநில அரசை, அஇஅதிமுக பொதுச் செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், அனைத்து பொதுத்துறை நிறுவனங்களுக்கும் 20 சதவீதம் தீபாவளி போனஸ் வழங்கப்படும் என்று மாநில அரசு அறிவித்ததை சுட்டிக்காட்டியுள்ளார்.

தீபாவளிக்கு ஒருசில நாட்களே உள்ள நிலையில் டேன்டீ தொழிளாளர்களுக்கு உடனடியாக போனஸ் வழங்க வேண்டும் என திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

தீபாவளிப் பண்டிகையையொட்டி சொந்த ஊர்களுக்குச் செல்பவர்களுக்கு முறையாக பேருந்து வசதிகளை மாநில அரசு ஏற்படுத்தித் தரவில்லை என பிஜேபி சட்டப் பேரவை உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் குற்றம் சாட்டியுள்ளார்.

கோவையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தனியார் பேருந்துக் கட்டணங்களை முறைப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்று அவர் கூறினார்.

இதனால் மக்கள் இன்னலுக்கு ஆளாகி இருப்பதாக அவர் தெரிவித்தார்.

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு மது விற்பனைக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக வரும் தகவல்கள் வருத்தமளிப்பதாக திருமதி வானதி சீனிவாசன் கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தில் வரைவு வாக்காளப் பட்டியல் இன்று வெளியிடப்படுகிறது.

இதையடுத்து வாக்காளர் பட்டியலில் திருத்தம் மேற்கொள்வதற்கான பணிகள் இன்று தொடங்குகிறது.

பெயர் சேர்த்தம், நீக்கம் செய்தல், முகவரி மாற்றம் உள்ளிட்டவற்றுக்கு வாக்காளர் பதிவு அதிகாரியிடம் நேரடியாகவோ அல்லது இணையதளம் மூலமாகவோ விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் 16, 17, 23, 24 ஆகிய தேதிகளில் வாக்குச்சாவடி மையங்களில் சிறப்பு முகாம்கள் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் இறுதி வாக்காளர் பட்டியல் ஜனவரி 6ஆம் தேதி வெளியிடப்படும் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

<<<<>>>>

வெப்ப அலையை மாநில பேரிடராக தமிழக அரசு அறிவித்துள்ளது.

சட்டப்பேரவையில் இது தொடர்பாக வெளியிடப்பட்ட அறிவிப்பை செயல்படுத்தும் வகையில் தமிழக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

வெப்ப அலையால் பாதிக்கப்பட்டு உயிரிழப்போரின் குடும்பத்தினருக்கு 4 லட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிவாரணப் பணிகள் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் உயிரிழந்தாலும், இதே அளவு நிவாரணம் வழங்கப்படும் என அந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

<<<<>>>>

சென்னை கடற்கரை – வேளச்சேரி இடையே பறக்கும் ரயில் வழித்தடத்தில் இன்று முதல் வழக்கமான ரயில்சேவை தொடங்கியுள்ளது.

புதிய பாதைக்கான பணிகள் காரணமாக கடந்த 14 மாதங்களாக வேளச்சேரி முதல் சிந்தாதிரிப்பேட்டை வரை மட்டுமே இயக்கப்பட்டு வந்த இந்த ரயில் சேவை தற்போது மீண்டும் சென்னை கடற்கரை வரை இயக்கப்படுகிறது.

இரு மார்க்கங்களிலும் தினமும் 45 சேவைகள் இயக்கப்பட உள்ளதாக ரயில்வே நிர்வாகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

*__இருவரிச் செய்திகள்__*

யுக்ரைனில் தற்போது அமலில் இருக்கும் ராணுவச் சட்டத்தை, வரும் பிப்ரவரி 7-ம் தேதி வரை நீட்டிக்க அந்நாட்டு அதிபர் திரு ஜெலன்ஸ்கி ஒப்புதல் அளித்துள்ளார்.

-----------

**Chad** நாட்டில் ராணுவ முகாம் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில், ராணுவ வீரர்கள் 40 பேர் உயிரிழந்தனர்.

-----------

இந்தியா - மாண்டெநீக்ரோ இடையேயான 3-வது சுற்று வெளியுறவு அமைச்சக அதிகாரிகள் நிலையிலான ஆலோசனைக் கூட்டம் போட்கோரிகாவில் நேற்று நடைபெற்றது.

-----------

கோவாவில் நடைபெற்ற உடலுறுதி தொடர்பான அயன் மேன் சேலஞ்ச் போட்டியில் பங்கேற்று முழுமையாக இலக்கை எட்டிய, மக்களவை உறுப்பினர் திரு தேஜஸ்வி சூர்யாவுக்குப் பிரதமர் திரு நரேந்திர மோடி பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

-----------

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு மை பாரத் தளத்தின் மூலம் இளைஞர்கள் பங்கேற்கும் தன்னார்வ முன்முயற்சியை, மத்திய இளைஞர் நலத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தொடங்கி வைத்தார்.

-----------

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தின் 35-வது பட்டமளிப்பு விழாவில், தமிழக ஆளுநர் திரு ஆர்.என். ரவி பங்கேற்று மாணவ, மாணவிகளுக்குப் பட்டங்களை வழங்கினார்.

-----------

சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் சார்பில் அறிவிக்கப்பட்ட திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து, மாநில அமைச்சர் திரு சேகர் பாபு தலைமையில் நேற்று ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

-----------

பத்திரிகையாளர் நல வாரியத்தின் எட்டாவது கூட்டம், மாநில செய்தித்துறை அமைச்சர் திரு மு.பெ. சாமிநாதன் தலைமையில் சென்னையில் நேற்று நடைபெற்றது.

-----------

மத்திய அரசின் மிஷன் வாத்சல்யா திட்டத்தின் கீழ், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 49 குழந்தைகளுக்கு 11 லட்சம் ரூபாய் உதவித் தொகையை மாவட்ட ஆட்சியர் திரு எம்.எஸ். பிரசாந்த் வழங்கினார்.

-----------

தேனி மாவட்டத்தில் பதிவு செய்யாமல் இயங்கும் விடுதிகளை உடனடியாகப் பதிவு செய்ய வேண்டும் என மாவட்ட ஆட்சியர் திருமதி ஷஜீவனா கூறியுள்ளார்.

-----------

தென்காசி மாவட்டத்தில் காவல்துறையினருக்கும் - பொதுமக்களுக்கும் இடையே நல்லுறவை ஏற்படுத்தும் வகையில் நடைபெற்ற விழிப்புணர்வு சைக்கிள் பேரணியில் 50-க்கும் மேற்பட்ட காவல்துறையினர் கலந்து கொண்டனர்.

-----------

காஞ்சிபுரத்தில் மாவட்ட ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் தலைமையில், ஊழல் தடுப்பு விழிப்புணர்வு வார உறுதிமொழியை அரசு அலுவலர்கள் ஏற்றனர்.

-----------

சென்னை ஆலந்தூர் மண்டலத்தில், 5 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட பாலத்தை மாநில அமைச்சர் திரு த.மோ. அன்பரசன் திறந்து வைத்தார்.

-----------

*<u>விளையாட்டுச் செய்தி</u>*

இந்தியா - நியூசிலாந்து மகளிர் அணிகளுக்கு இடையேயான மூன்றாவது மற்றும் இறுதி ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

அகமதாபாதில் இப்போட்டி பிற்பகல் மணி 1.30க்கு தொடங்குகிறது.

மூன்று போட்டிகளைக் கொண்ட தொடரில், இரு அணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றி பெற்று சமநிலையில் உள்ளன.

**<<<<The End>>>>**